இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 17-04-2025

# இந்திய மாநிலங்களின் சுயாட்சி முதல்வர் -1

இந்திய மாநிலங்கள் அனைத்துக்குமான உரிமையை வாங்கித் தரும் முன்னெடுப்பில் இறங்கி இருக்கிறார் 'திராவிட நாயகன்' - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

"மாநில சுயாட்சியை வென்றெடுக்க சட்ட முன்னெடுப்புகளை கழகம் மேற்கொள்ளும்" என்று திராவிட முன்னேற்றக் கழக பவள விழா - முப்பெரும் விழாப் பொதுக்கூட்டத்தில் கடந்த செப்டம்பர் மாதம் உரையாற்றிய மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரக்கச் சொன்னார்கள்.

**"நமது எல்லாக் கனவுகளும் நிறைவேறிவிட்டதா எனக் கேட்டால்... இல்லை! மாநில உரிமைகளை வழங்கும் ஓர் ஒன்றிய அரசு அமையவில்லை. நிதி உரிமை உள்ளிட்ட கோரிக்கைகளுக்கு இன்னமும் நாம் போராட வேண்டிய நிலை தான் இருக்கிறது. பேரறிஞர் அண்ணாவும் - தலைவர் கலைஞரும் வலியுறுத்திய மாநில சுயாட்சிக் கொள்கை என்பது நமது உயிர்நாடிக் கொள்கைகளில் ஒன்று. எல்லா அதிகாரமும் கொண்டவைகளாக மாநில அரசுகளை மாற்றும் வகையில், அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வர முயற்சிக்கும் சட்டமுன்னெடுப்புகளைத் திராவிட முன்னேற்றக் கழகம் நிச்சயமாக, உறுதியாகச் செய்யும்"** என்று சொன்னார் முதலமைச்சர்.

இப்போது அதற்கான முதல் முயற்சியாக மாநில சுயாட்சிக் குழுவை அமைத்துள்ளார் முதலமைச்சர் அவர்கள்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ்நாடு சட்டமன்றத்தில் மாநில சுயாட்சித் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு முன்னால் அன்றைய முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு காட்சியை விவரித்தார்கள். அது ....

**"சிறையிலிருந்த நாடு, விடுதலை பெற்று விட்டது. கதவு திறந்தது. பூட்டிய இருப்புக் கூட்டிலிருந்து கைதி, புன்னகை மலர வெளியே வருகிறான். தந்தையைக் காணாமல் தவித்துக் கொண்டிருந்த தளிர் நடைச் செல்வம், இளங்கரம் தூக்கி, தாவியோடுகிறது, அவனைத் தழுவிக் கொள்ள! அவனும் அடக்க முடியாத மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரள மகனைத் தூக்கி முத்தமிடக் கரங்களை நீட்டுகிறான். கைகள் இயங்க முடியாமல் தவிக்கின்றன. சிறையில் இருந்து தான் விடுபட்டுவிட்டானே; இன்னும் என்ன தடை?**

**தன்னை யார் தடுப்பது? சுற்றும் முற்றும் பார்க்கிறான். அவன் சிறையில் இல்லை, சுதந்திர பூமியில்தான் இருக்கிறான். பிறகு யார், தன் குழந்தையைக் கூடத் தழுவிட முடியாமல் அவனைக் கட்டுப்படுத்துவது? யாருமல்ல. அவன் சிறையிலிருக்கும்போது அவன் கைகள் இரண்டையும் காலையும் சேர்த்து ஒரு விலங்கு மாட்டி இருந்தார்கள். விடுதலை அடைந்த பூரிப்பில், விலங்குகளைக் கழற்ற வேண்டுமென்ற நினைப்புகூட இல்லாமல் அவன் வெளியே வந்துவிட்டான். அவன் சுதந்திர மண்ணில்தான் இருக்கிறான்; கை, கால் விலங்கு மட்டும் கழற்றப்படவில்லை.**

**மனிதன் விடுதலையாகிவிட்டான். கை, கால்கள் மட்டும் கட்டுண்டு கிடக்கத் தேவையில்லையே!**

**இந்தியா, விடுதலை பெற்றுவிட்டது. அதன் அவயவங்களைப் போன்ற மாநிலங்கள் மட்டும் மத்திய அரசுக்குத் தேவையில்லாத அதிகாரக் குவியல்கள் என்னும் விலங்குகளால் கட்டுண்டு கிடப்பானேன்?"** என்று கேட்டார் தலைவர் கலைஞர் அவர்கள்.

இதோ இன்றைய முதல்வரும் ஒரு காட்சியை விவரிக்கிறார்...

**"இந்திய திருநாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும் மிகப்பெரும் பொறுப்பை மாநிலங்கள் ஏற்றுக் கொண்டுள்ளன. கல்வி, சுகாதாரம், ஊரக வளர்ச்சி, நகர்ப்புற மேம்பாடு என அனைத்தையும் மாநிலங்கள் முன்னெடுத்துச் செல்கின்றன. ஆனால் அவற்றையெல்லாம் நிறைவேற்றிடத் தேவையான அதிகாரங்கள் மாநிலங்களிடம் இருந்து பறிக்கப்பட்டு ஒன்றிய அரசிடம் குவிக்கப்பட்டு வருகின்றன. பசியால் வாடித் தவிக்கும் தன்னுடைய குழந்தைக்கு என்ன உணவு கொடுத்திட வேண்டும் என்பது அந்த குழந்தையின் தாய்க்குத் தான் தெரியும். ஆனால், அந்த குழந்தை உண்ணும் உணவை, கற்கும் கல்வியை, கடந்து செல்லும் பாதையினை, டெல்லியில் இருந்து யாரோ ஒருவர் தீர்மானித்தால் கருணையே உருவான தாய்மையும் பொங்கி எழத் தானே செய்யும்?"** என்று உணர்ச்சியாய் கேட்ட முதலமைச்சர் அவர்கள், அதற்கான வழிமுறையையும் வகுக்கத் தொடங்கிவிட்டார்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள மாநிலங்களின் நியாயமான உரிமைகளைப் பாதுகாக்கவும், ஒன்றிய-மாநில அரசுகளுக்கு இடையேயான உறவுகளை மேம்படுத்திடவும், உச்ச நீதிமன்ற மேனாள் நீதியரசர் திரு.குரியன் ஜோசப் அவர்களைத் தலைவராகக் கொண்ட குழுவை முதலமைச்சர் அவர்கள் அமைத்துள்ளார்கள். இதன் உறுப்பினர்களாக, இந்திய கடல்சார் பல்கலைக் கழகத்தின் மேனாள் துணை வேந்தரும், ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரியுமான அசோக் வர்தன்ஷெட்டி, தமிழ்நாடு மாநில திட்டக்குழுவின் மேனாள் துணைத்தலைவர் பேராசிரியர் மு.நாகநாதன் ஆகியோர் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

இக்குழு தனது இடைக்கால அறிக்கையை ஜனவரி மாத இறுதிக்குள்ளும், இறுதி அறிக்கையை இரண்டு ஆண்டுகளிலும் அரசுக்கு வழங்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

1974 ஆம் ஆண்டு நீதிபதி இராஜமன்னார் தலைமையில் குழு அமைத்தார் முதலமைச்சர் கலைஞர்.

அரசியலமைப்புச் சட்டத்தின் ஏழாவது இணைப்பில், மத்தியப் பட்டியல், மாநிலப் பட்டியல், பொதுப்பட்டியல் என்ற தலைப்புகளில் நாடாளுமன்றம் மாநிலச் சட்டமன்றங்கள் ஆகியவற்றின் சட்டமியற்றும் அதிகாரங்கள் கூறப்பட்டுள்ளன. அப் பட்டியல்களில் பல்வகைத் திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென இராஜமன்னார் குழு கருத்துரை வழங்கியது. நாட்டின் பாதுகாப்பு, வெளிநாட்டு உறவுகள், மாநிலங்களுக்கிடையே போக்குவரத்துத் தொடர்புகள், நாணயச் செலாவணி ஆகியவை தொடர்பான அதிகாரங்களை மட்டும் கொண்டுள்ள ஒன்றிய அரசும், எஞ்சிய அதிகாரங்கள் உட்பட ஏனைய அதிகாரங்கள் அனைத்தையும் கொண்டுள்ள மாநில அரசுகளும் உள்ள உண்மையான கூட்டாட்சியை நிறுவும் இலட்சியத்துடன், தமிழ்நாடு அரசு, இராஜமன்னார் குழுவின் பரிவுரைகளை ஆய்ந்தபின் ஏற்றுக் கொண்டது.

அந்த வழித்தடத்தில் தான் இன்றைய முதலமைச்சர் அவர்கள், நீதிபதி குரியன் ஜோசப் தலைமையிலான குழுவை அமைத்துள்ளார்கள்.

**இது பேரறிஞர் அண்ணாவின் 'இறுதி உயிலை' நிறைவேற்றும் செயல் ஆகும்.**

**- தொடரும்-**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (16.4.2025) தலைமைச் செயலகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. பி.கீதாஜீவன் 2025–2026 ஆம் ஆண்டிற்கான சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்து பெற்றார். உடன் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளீதரன், சமூக நல ஆணையர் திருமதி. ஆர். லில்லி, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை கூடுதல் செயலாளர் திருமதி ச. வளர்மதி, குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை இயக்குநர் ஜானி டாம் வர்கீஸ், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்ட இயக்குநர் திருமதி ஐ.சா. மெர்சி ரம்யா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (16.4.2025) தலைமைச் செயலகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. பி. கீதாஜீவன் 2025–2026 ஆம் ஆண்டிற்கான மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை செயலாளர் திருமதி எஸ். மதுமதி, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை ஆணையர் திருமதி எம்.லட்சுமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட அலுவலகத்தில்

## அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாள் விழா!

### மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. தலைமை!

கிருஷ்ணகிரி, ஏப்.17-

"வடக்கில் உதித்த சமத்துவ சூரியன் அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளான ஏப்ரல் 14ஆம் தேதி இனி சமத்துவ நாள் என்று கொண்டாடப்படும்" என தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடந்த 2022ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டப்பேரவையில் விதி 110ன் கீழ் அறிவித்து, அதனைத் தொடர்ந்து அண்ணல் அம்பேத்கரின் 135வது பிறந்த நாளை முன்னிட்டு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட அலுவலகத்தில் டாக்டர் அம்பேத்கரின் திருவுருவப் படத்திற்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி "சமத்துவ நாள்" உறுதிமொழியை ஏற்றார்.

பின்னர் தாலுக்கா அலுவலகம் மற்றும் செட்டியம்பட்டியில் உள்ள அம்பேத்கர் உருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் வெற்றிச்செல்வன், நாகராஜ், வெங்கடேசன், சீனிவாசன், கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி, சந்திரன் கதிரவன், செந்தில், கிருபாகரன், பாலன், நாகராசன், உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (16.4.2025) தலைமைச் செயலகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. பி.கீதாஜீவன் 2025–2026 ஆம் ஆண்டிற்கான சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### 'மாநிலத்தில் சுயாட்சி - மத்தியில் கூட்டாட்சி' என்பது பரந்துபட்ட கொள்கை முழக்கம்!

## தமிழ்நாட்டு உரிமைகளைப் பறித்தால் வரும் தேர்தலில் பா.ஜ.க. டெபாசிட் வாங்காது !

### நயினார் நாகேந்திரனுக்கு ஆர்.எஸ்.பாரதி எச்சரிக்கை!

**சென்னை, ஏப்.17-**

**'மாநிலத்தில் சுயாட்சி - மத்தியில் கூட்டாட்சி' என்பது தமிழ்நாட்டு மக்களின் உணர்விலும் உயிரிலும் கலந்த முழக்கம் "தி.மு.க. பிரிவினைவாதம் பேசுகிறது" என்ற வாதம் 50 ஆண்டுக் கால பழைய முனை மழுங்கியது அண்ணா தி.மு.க.வில் இருந்தவருக்கு அண்ணாவின் அடிப்படை சித்தாந்தம் கூட தெரியவில்லை திராவிடக் கட்சியில் இருந்தார் என்பதற்கு நயினார் நாகேந்திரன் வெட்கப்பட வேண்டாமா? மாநில உரிமை பறிப்புக்கு ஆதரவாக இருந்தால் 2026 தேர்தல் பா.ஜ.க. டெபாசிட் கூட வாங்காது என கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.**

இது குறித்து ஆர்.எஸ்.பாரதி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு சட்டப்பேரவையில் நேற்று 110 விதியின் கீழ் மாநில சுயாட்சி தொடர்பாக முக்கிய அறிவிப்பை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார். மாநில நலனில் அக்கறை இல்லாத அ.தி.மு.க.வும் அதன் கூட்டாளியாக பா.ஜ.க.வும் வெளிநடப்பு செய்தன. இதன் மூலம் டெல்லி சர்வாதிகாரத்தின் அடிமைகள் நாங்கள் என அ.தி.மு.க. பா.ஜ.க. உறுப்பினர்கள் தங்களை வெளிப்படுத்தினர்.

மாநில நலன் மற்றும் மாநில சுயாட்சி சார்ந்து தி.மு.க. போராடிய போதெல்லாம் அண்ணா காலத்தில் இருந்தே "பிரிவினைவாதம் பேசுகிறது தி.மு.க." என அவதூறு பரப்பினார்கள். இப்போது அதே அவதூறை மோடி அமித்ஷாவின் தமிழ்நாட்டு புதிய ஏஜெண்ட் நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

### பிரிவினைவாதம் என்பது பழைய முனை மழுங்கியது!

"மாநிலங்களை பிரிக்க வேண்டும் என பிரிவினைவாதத்தை முதல்வர் தூண்டுகிறார்" என நயினார் நாகேந்திரன் பேசியதில் இருந்தே அண்ணா திமுகவில் இருந்த அவருக்கு அண்ணாவின் அடிப்படை சித்தாந்தம் கூட தெரியாத ரசிக மனநிலையில் இருந்திருப்பதை காட்டுகிறது.



"மாநிலங்கள் அனைத்து அதிகாரங்களையும் கொண்டவையாக விளங்கினால்தான் மாநிலங்கள் வளர்ச்சி அடையும்; இந்தியாவும் வலிமை பெறும்" என்று சட்டப்பேரவையில் நேற்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசியதை கேட்டிருந்தாலே அவரின் நல்ல நோக்கம் புரிந்திருக்கும். டெல்லி எஜமானர்கள் கோபித்துக்கொண்டால் பதவிக்கு ஆபத்து நேருமோ என்ற பதற்றத்தில் அவசரமாக பேரவையில் இருந்து வெளிநடப்பு செய்துவிட்டு, அவதூறு கருத்தை ஊடகங்கள் மூலம் நயினார் நாகேந்திரன் பரப்பி இருப்பது கண்டிக்கத்தக்கது.

இந்தியா என்பது முழு உடல், அதன் உறுப்புகள் தான் மாநிலங்கள் என்பதையே அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்துகள் சொல்கின்றன. மாநிலங்களுக்கான பலம் என்பது இந்தியாவிற்கான பலம். அதாவது மாநிலங்கள் பலம் பெற்றால் தான் இந்தியா வலுப்பெறும். நமது உடலில் அனைத்து உறுப்புகளும் சீராக இயங்கினால் தான், முழு உடலும் வலுப்பெறும் என்ற அடிப்படைக் கூட தெரியாதவராக நயினார் நாகேந்திரன் இருப்பதை பார்த்தாலே திராவிடக் கட்சியில் இருந்து அதற்கு நேரெதிர் கொள்கை கொண்ட ஆரிய கட்சிக்கு சென்றதற்கான காரணம் விளங்கும்.

### நயினார் நாகேந்திரன் அர்த்தமின்றி பேசுகிறார்!

உடலில் உள்ள உறுப்புகள் பலம் பெறுவது, முழு உடலை வலிமையற்ற தாக்கி விடுமா? என்பது போல மாநில உரிமைகளை தி.மு.க.கோருவது இந்திய நாட்டை வலிமையற்றதாக மாற்றி விடுமா? என்பதற்கு நயினார் நாகேந்திரன் பதில் சொல்ல வேண்டும்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உரையில் "ஒற்றுமையை பாதிக்காத வகையில் உரிமையை மீட்டு எடுப்போம்" என்று குறிப்பிட்டதன் அர்த்தம் நயினார் நாகேந்திரன் அவர்களுக்கு தெரியுமா?

அண்ணா உருவாக்கிய மாநில சுயாட்சி என்கிற கருவிற்கு கலைஞர் உருவம் கொடுத்தார்; அந்த உருவத்திற்கு தற்போதைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்வடிவம் கொடுத்து வருகிறார். இந்த அரசியல் நயினார் நாகேந்திரன் அவர்களுக்குப் புரியவில்லை என்றால் அண்ணா தி.மு.க. என்ற திராவிடக் கட்சியில் இருந்தார் என்பதற்கு வெட்கப்பட வேண்டாமா?

### மாநில உரிமைகளைக் கோருவது எப்படி பிரிவினைவாதமாகும்?

"இந்திய அரசமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள மாநிலங்களின் நியாயமான உரிமைகளைப் பாதுகாக்கவும், ஒன்றிய - மாநில அரசுகளுக்கு இடையேயான உறவுகளை மேம்படுத்திடவும், உச்ச நீதிமன்ற முன்னாள் நீதியரசர் குரியன் ஜோசப்பைத் தலைவராகக் கொண்ட குழு அமைக்கப்படுகிறது" என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டதை கேட்டாலே தமிழ்நாட்டிற்கு மட்டும் உரிமைகளை திமுக கேட்கவில்லை. ஒன்றியமாநில அரசுகள் இடையேயான உறவுகளை மேம்படுத்தும் செயல் எப்படி பிரிவினைவாதமாகும்?

நாக்பூரில் உள்ள ஆர்.எஸ்.எஸ் கும்பலும் குஜராத்தை சேர்ந்த பாஜக தலைமையும் ஏவும் பணியை மாநிலங்களில் உள்ள பாஜக தலைமை சிரமேற்று செய்து முடிப்பது போல மாநிலங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சரும் இருக்க வேண்டும் என நயினார் நாகேந்திரன் நினைப்பது அவரின் அரசியல் புரிதல் குறைப்பாட்டை காட்டுகிறது.

"தி.மு.க. பிரிவினைவாதம் பேசுகிறது" என திராவிட எதிர்ப்பாளர்கள் பேசிய 50 ஆண்டுக் கால பழைய முனை மழுங்கிய வாதத்தை விட்டுவிட்டு, ஒன்றிய அரசின் கட்டளைக்கு அடிபணியும் மாநிலம் தமிழ்நாடு இல்லை; மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி' என்கின்ற பரந்துபட்ட கொள்கை முழக்கம் தி.மு.க.வுடையது மட்டுமல்ல தமிழ்நாட்டு மக்களின் உணர்விலும் உயிரிலும் கலந்த முழக்கம் என்பதால் தமிழ்நாட்டு உரிமைகளை பறித்தால் முன்பைபோல பாஜக 2026 தேர்தலிலும் டெபாசிட் கூட வாங்காது என எஜமானர்களுக்கு நயினார் நாகேந்திரன் சொல்வது நல்லது.

இவ்வாறு ஆர்.எஸ்.பாரதி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.